# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,

# METTUPALAYAM

## DEPOSITION OF WITNESS

## O.S.92/2020

## CNR.No.TNCB19000

Date:15.04.2026 DW.2

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | மாதையன் | **வயது** | 86 |
| **த/பெ** | **புஜ்ஜிங்கன்** | **வட்டம்** | மேட்டுப்பாளையம் |
| **விலாசம்** | **காரமடை, எம். கே. புதூர்** | **மாவட்டம்** | கோவை |
| | | **தொழில்** | |

The witness swearned under oaths Act 1969 on this the day of 15th April 2026

பி.வா.சா.2 மீண்டும் வரவழைக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் 10-ம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். வாதிகள் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரத்தை நான் தெரிந்துகொள்ளவில்லை. வாதிகள் தரப்பில் என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார்கள் மற்றும் வாதிகள் தாக்கல் செய்த முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் போன்ற விபரத்தை படித்து பார்த்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. தாவா சொத்தில் நான் சுவாதீனத்தில் இல்லையென்றால் சரிதான். எனக்கு ரங்கசாமி என்பவர் தாவா சொத்தை கிரையம் செய்து கொடுத்தார். ரங்கசாமி என்பவரிடம் கிரையம் பெறுவதற்கு முன்பு மூல பத்திரத்தை வாங்கி படித்து பார்த்தேனா என்றால் படித்துபார்த்துதான் வாங்கினேன்.

என் பெயரில் கிரைய ஆவணம் எழுதுவதற்கு முன்பாகவே எனக்கும் ரங்கசாமிக்கும் வரவு செலவு இருந்தது என்றால் இல்லை. எனக்கும் ரங்கசாமிக்கும் வரவு செலவு இருந்தது என்றும் தாவா சொத்தை ஈடுகாட்டி அடமானம் ரங்கசாமி எனக்கு செய்து கொடுத்தார் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை சட்ட விரோதமாக ஆதாயம் பெறுவதற்காக தாவா சொத்தை அடமானம் வைக்கவில்லையென பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. ரங்கசாமி 04.02.1966 ல் ஒரு அடமான கடன் பத்திரம் எழுதி கொடுத்து மேட்டுப்பாளையம் சார்பதிவாளர் அலுவலக ஆவண

எண்.115/1966 என்று பதிவாகி உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த அடமான கடன் விபரம் நான் கிரையம் பெற்றதாக சொல்லப்படும் கிரைய ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

என் பெயருக்கு கொடுத்த கிரைய பத்திரத்தை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். ரங்கசாமிக்கு கிரைய தொகையை ரொக்கமாக கொடுத்தேன். நான் சொல்வது போல் ரங்கசாமிக்கு கிரைய தொகையை ரொக்கமாக கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அந்த கிரைய பத்திரத்தில் ரங்கசாமியின் பெண் மக்கள் யாரும் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். அப்பொழுது ரங்கசாமியின் பெண் மக்கள் ரங்கசாமியுடன் வாழ்ந்து வந்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நானும் ரங்கசாமியும் ஒரே ஊர்க்காரர்கள் என்றால் ரங்கசாமியின் சொந்த ஊர் இடையர்பாளையம். கடைசியாகதான்வந்தார்கள்.

வழக்கு சொத்தை கிரையம் வாங்கியதில் இருந்து ரங்கசாமி எனது ஊரில்தான் இருந்து வருகிறார் என்றால் சரிதான். ரங்கசாமி பூர்வீக சொத்தை விற்றுதான் தாவா சொத்தை கிரையம் பெற்றார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் ரங்கசாமியின் முழு விபரத்தையும் தெரிந்துகொண்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகளுக்கு பங்கு உள்ள பூர்வீக சொத்தை விற்பனை செய்து அதில் கிடைக்கப்பெற்ற வருமானத்தை கொண்டு தாவா சொத்தை வாங்கி உள்ளதால் தாவா சொத்தில் வாதிகளுக்கும் பங்கு உள்ளது என்றால் சரியல்ல.

1ம் பிரதிவாதி ராஜப்பனின் மகன் 5ம் பிரதிவாதி சஞ்சீவ்குமாருக்கு 1ம் பிரதிவாதி ராஜப்பன் தாவா சொத்தினை பொறுத்து ஒரு செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தை பொறுத்து 1 மற்றும் 5 பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ரங்கசாமி எனக்கு கிரையம் கொடுப்பதற்கு முன்பாக அவர்களுக்குள் பாகம் செய்து கொள்ளப்பட்டதா என்பது குறித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. தாவா சொத்தை பொறுத்து வாதிகள் குடும்பத்திற்கு பாகப்பிரிவினை நடைபெறாததால் என் பெயரில் ஏற்படுத்தப்பட்ட கிரைய ஆவணம் தொடக்கம் முதலே செல்லத்தக்கதல்ல அது வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

என் பெயரில் எழுதப்பட்ட கிரைய பத்திரம் செல்லாததால் அது காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்படாது என்றால் சரியல்ல. என் பெயரில் எழுதப்பட்ட கிரைய பத்திரம் செல்லாததால் அதன் பிறகு ஏற்படுத்தப்பட்ட வருவாய்துறை ஆவணங்கள் செல்லாது என்றும் அது வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வாதிகளுக்கு சட்டப்படி பங்கு உள்ளது என்றும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>2-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

( வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன்பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

Sd/-K.Palanivel,

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.